13.02.2026 OS.No.270/2021 DW1 Name :.அன்பு

குறுக்கு விசாரணை

1. எனக்கு படிப்பறிவு இல்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தில் அனைத்து பக்கங்களிலும் உள்ள கையெழுத்து என்னுடையது தான். வழக்கு சொத்து என்னுடையது தான். இந்த வழக்கில் பதில் தாக்கல் செய்வதற்கு விவரங்களை வழக்கறிஞரிடம் நான்தான் கொடுத்தேன். வழக்கு சொத்து என்னுடைய சுயசம்பாத்திய சொத்து ஆகும். அந்த ஆவணத்தை வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்று நியாபகம் இல்லை. 25 எச்.பி மின் இணைப்பு வழக்கில் குறிப்பிடவில்லை என கூறியுள்ளேன்.
2. வழக்கு சொத்து விவரத்திலும் வா.சா.ஆ.1 ஆவணத்திலும் குறிப்பிட்டுள்ள மின் இணைப்பு என்னுடையது தான். வாதிக்கும் எனக்கும் முன் விரோதம் எதுவும் இல்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தை எழுதிய நபருக்கும் அதில் சாட்சிகளாக கையெழுத்திட்டுள்ளவர்களுக்கும் எனக்கும் இடையில் முன்விரோதம் எதுவும் இல்லை. வாதி சுமார் 7, 8 முறை கிரையம் செய்து கொடுக்குமாறு என்னை கேட்டுள்ளார் என்றால் அவ்வாறு இல்லை. வாதி எனக்கு 2 முறை வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றால் அது எனக்கு நியாபகம் இல்லை.
3. நான் பதில் அறிவிப்பு அனுப்பியது நியாபகம் உள்ளது. வட்டி பணம் வாதிக்கு கொடுத்துள்ளேன் என்பதற்கு எழுத்துமூலமான ஆவணங்கள் எதுவும் இல்லை. அதற்காக தனியாக குறிப்புகளும் நான் எழுதி வைக்கவில்லை. தாவா சொத்தின் மதிப்பை காட்டகூடிய

ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. வா.சா.ஆ.1 ஆவணம் வழக்கில் நான் கூறபட்டுள்ளபடி வாதிக்கு எழுதி கொடுத்துள்ளேன் என்றால் தவறாகும். வா.சா.ஆ.1 ஆவணம் தவறானது என வாதிக்கு எதிராக தனியாக நான் வழக்கு எதுவும் போடவில்லை. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 13/02/2026 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்/கைரேகை செய்யப்பட்டது.

RAJA B

SUBORDINATE JUDGE, VANIYAMBADI
Digitally signed by RAJA B
Location: THIRUPATHUR
Date: 2026.02.13 18:37:09 +0530

சார்பு நீதிபதி
வாணியம்பாடி.